P.R.NO: 68.

29.03.2017.

## ஓய்வூதியர்களுக்கான வருடாந்திர நேர்காணல்

## பத்திரிகைச் செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில், மாவட்டக் கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 2017-18 ம் ஆண்டுக்கான நேர்காணல் 03.04.2017 முதல் நடைபெற உள்ளது. எனவே ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி முடிய கீழ்க்கண்ட ஆவணங்களுடன் நேர்காணலுக்கு ஆஜராகிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1) ஓய்வூதிய புத்தகம் ( அசல் மற்றும் நகல்)
2) ஆதார் அட்டை ( நகல்)
3) வங்கி சேமிப்பு கணக்கு எண் (நகல்)
4) குடும்ப அடையாள அட்டை (நகல்)

வருமான வரி செலுத்தும் நிலையிலுள்ள ஓய்வூதியர்கள் நிலையான வருமான வரி கணக்கு அட்டை அளித்திடவும், குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் மறுமணம் புரியாமை சான்று மற்றும் அரசாணை எண்.325 நிதி ( ஓய்வூதியம் ) துறை, நாள்: 28.11.2011 ன்படி குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் திருமணம் / மறுமணம் புரியாமை சான்று மற்றும் வருமான சான்று ஆகியவற்றுடன் நேரில் ஆஜராகிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தற்போது "ஜீவன் பிரமான்" ( www.jeevanpraman.gov.in) என்ற இணைய தளம் வாயிலாக சம்பந்தப்பட்ட கருவூலங்களுக்கு செல்லாமலேயே ஆதார் எண் பதிவு செய்து நேர்காணலை மேற்கொள்ள நடப்பாண்டு முதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. நேர்காணலுக்கான இந்த வசதியினை அரசு e. சேவை / பொது சேவை மையங்கள் மூலம் பயன்படுத்திக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நேர்காணலுக்கு வர இயலாத நிலையிலுள்ள ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் உரிய படிவத்தில் வாழ்நாள் உயிர் சான்று ( Life Certificate) அளித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்கண்ட வாழ்நாள் உயிர்சான்றுக்கான மாதிரி படிவத்தை www.tn.gov.in.karuvoolam என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஓய்வூதியர்கள் ஏப்ரல்.2017 முதல் ஜீன்.2017 முடிய நேர்காணலுக்கு வரத்தவறினாலோ அல்லது வாழ்வு உயிர் சான்று அனுப்பத் தவறினாலோ அவர்களது ஓய்வூதியம் ஆகஸ்ட்.2017 முதல் நிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி.

வெளியீடு.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.